Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 66 அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக. சங். 149:1 ஜூலை 2020 No.7

நாம் நமது பாவங்களை அறிக்கையிடுவதின் தேவை

The need to confess our Sins

D.L. Moody

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" *1 யோவா.1:9.*

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" *நீதி.28:13.*

"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்" *யாக்.5:16.*

வேதவசனங்களைத் திருப்பிப் பார்க்கும்போது தேவனுக்கு மிக நெருக்கமாக வாழ்ந்தவர்களும், அவருடைய வல்லமையை அதிகமாகப் பெற்றவர்களும்தான் தங்கள் பாவங்களையும் தோல்விகளையும் அதிகமாக அறிக்கையிட்டிருப்பதைக் காணலாம். தானியேலைக் குறித்து எந்த குற்றமும் எழுதப்படவில்லை. ஆனால் அவன் தனது பாவத்தையும், தனது ஜனத்தின் பாவத்தையும் அறிக்கையிட்டான். அவனது ஆழமானதும், தாழ்மை நிறைந்ததுமான பாவ அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

தானியேலின் பாவ அறிக்கை ஜெபத்தில் ஆறு முக்கிய காரியங்களைக் காணலாம். முதலாவது, 'நாங்கள் பாவம் செய்தோம்' என்பது, இரண்டாவது 'நாங்கள் அக்கிரமம் செய்தோம்' என்பது, மூன்றாவது துன்மார்க்கமாய் நடந்ததும், நான்காவது கலகம் பண்ணியதும், ஐந்தாவது நியாயங்களை விட்டு விலகிப் போனதும், ஆறாவதாக தீர்க்கதரிசிகளாகிய தேவ ஊழியக்காரருக்கு செவி கொடாமற் போனதுமாகும் *தானி.9:5-6.*

இவை யாவும் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியவை

யோபு ஒரு பரிசுத்தவான். அவன் மேன்மையான ஒரு பிரபுவும் கூட. ஆயினும் அவன் தூளில் விழுந்து தன் பாவங்களை அறிக்கையிட வேண்டிய தாயிருந்தது யோபு.*42:6.* ஏசாயா தேவனுடைய பரிசுத்தத்தை ஆலயத்தில் தரிசித்த போது, அவரது ஒளியில் தன்னை உணர்ந்து, 'ஐயோ நான் அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ளவன்' என்று கதற வேண்டியதாயிற்று ஏசா.*6:5.*

கிருபையின் மிகப்பெரிய கிரியைக்கு முன்பாக தேவனுடைய சபை தனது பாவங்களை அறிக்கையிடுவது அவசியம் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன். தேவனை விசுவாசிக்கிற ஜனங்கள் மத்தியில் ஆழமான கிரியை நடப்பிக்கப்பட வேண்டும். தேவனற்ற வர்களுக்குப் பிரசங்கிப்பதை விட்டு விட்டு கிறிஸ்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்கிறவர்களுக்கே, பிரசங்கிக்க இது காலமோ என்று சிலவேளைகளில் நான் எண்ணுவதுண்டு. நமது வாழ்க்கையின் தரம் சபையில் மிகச்சிறந்த தாயிருப்பின், ஆயிரக்கணக்கான பிற மக்கள் சபைக்குள் திரண்டு வருவது உறுதி.

சென்று போன காலங்களில் தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்கள், தங்கள் பாவங்களிலிருந்தும், விக்கிரக வணக்கத்திலிருந்தும் விலகினார்கள். அவர்களைச் சுற்றிலும் வாழ்ந்த மக்களில் தேவபயம் உண்டாயிற்று. இஸ்ரவேல் மக்களின் சரித்திரத்திலும் அவர்கள் அன்னிய தேவர்களை விட்டு விலகியபோது தேவன் அவர்கள் தேசத்தை சந்தித்து அங்கு பலத்த கிரியைகளை நடப்பித்தார்.

நியாயத்தீர்ப்பு நம்மிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும்!

தேவனுடைய சபைக்குள் உத்தமமும் ஆழமுமான எழுப்புதல் ஏற்படுவதே இன்றைய தேவை. உலக மக்களை சந்திக்க தேவன் குளிர்ந்த சடங்காசார சபையை பயன் படுத்துவதில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பு நம்மில் ஆரம்பிக்க வேண்டும் *1 பேது. 4:17.* தானியேல் ஏறெடுத்த பாவ அறிக்கையின் ஜெபமே அவன் அற்புதமான பதிலைப் பெறக் காரணம் (தானி.*9* படிக்க) வேத புத்தகம் முழுவதிலுமுள்ள ஜெப அதிகாரங்களில் இது மிகச்சிறந்தது (தானி.*9:20-22).*

யோபு தன் பாவங்களை அறிக்கையிட்டபோது தேவன் அவனது ஜெபத்தைக் கேட்டு அவன் சிறையிருப்பைத் திருப்பினார் யோபு.*42:10.* அதுபோல் நாமும் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, நமது பாவங்களை அறிக்கையிட்டு, அவற்றை விட்டு விடுவோமானால் தேவன் நமது ஜெபத்தையும் கேட்டு நமது சிறையிருப்பையும் திருப்புவார். ஏசாயா 'ஐயோ நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள மனுஷர் மத்தியிலிருக்கிறேன்' என்று கதறியபோது தேவதூதன் பலிபீடத்திலிருந்து ஒரு தழலைக் குறட்டால் எடுத்து வந்து அவன் உதடுகளைத் தொட்டான். அவனாலே ஏசாயா தீர்க்க தரிசனம் என்ற அற்புதமான புத்தகம் எழுதப்பட்டது.

'நான் பாவஞ்செய்தேன்' *2 சாமு. 12:13* என்று தாவீது ஒப்புக் கொண்ட போதுதான் தேவன் அவனுக்குக் கிருபையளித்தார் சங்.*32:5.* சங்.*51:3-4* வசனங்களில் அவன் ஏறெடுத்த இன்னொரு பாவ அறிக்கையையும் காணலாம். அது லூக்.*15:21*-ல் இளைய குமாரன் திரும்பி வந்தபோது தந்தையிடம் ஏறெடுத்த அறிக்கையை ஒத்திருக்கிறது.

தேவன் மனிதரைப் பிரியப்படுத்துகிறவரல்ல

தேவ ஆவியானவர் நமது இருதயத்தில் நமது பாவத்தை உணர்த்தும் போது அவர் ஏழை பணக்காரன் என்று பார்ப்பதில்லை.

எவ்வளவாக நாம் நமது இருதயத்தை நிதானித்து நியாயம் தீர்க்கிறோமோ அவ்வளவாக விடுதலையும் தொடரும் *11 கொரி.11:31.* யோனா கடலில் தூக்கி வீசப்பட்டபோது கப்பலில் அமைதி ஏற்பட்டது யோனா *1:15.* ஆகானும் குடும்பமும் கல்லெறிந்து கொல்லப்பட்டபோது வாதை நின்று போயிற்று.

தாமஸ் ஃபுல்லர் என்பவர் 'மனிதன் தனது பெலவீனத்தை ஒத்துக் கொள்ளும்போது, அவன் தனக்கு உதவியாகக் கிருபைதனை பெற்றுக் கொள்ள ஏதுவாகிறது' என்கிறார்.

பாவ அறிக்கை தாழ்மையைத் தருகிறது அது தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது

விசுவாசிகளுக்கிடையில் பாவ அறிக்கை ஆழமாயிருந்தால் தேவனற்ற வர்கள் மத்தியில் பாவ உணர்வு ஏற்படும். தேவன் தமது பிள்ளைகளின் இருதயத்தில் கிரியை செய்வதால் நாம் பாவத்தின் கொடுமையை அதிக அளவில் உணருவோம்.

தேவன் நமது இருதயங்களை ஆராய்ந்து பார்க்கட்டும் என்று ஜெபிப்போம். நமது வலது கண் இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்து போடுவோம். வலது கை இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப் போடுவோம். அப்போது தேவனிடமும்

(4-ம் பக்கம் பார்க்க)

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்
மொபைல்: 95432 21008
94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

யோசேப்பு

ஒவ்வொரு உயர்வுக்கு முன்பும் மாபெரும் பரிசோதனை காத்திருக்கிறது என்பதை மறக்காதே. பாவத்திற்கு இணங்காததினால் 'அடிமையாகிய எபிரேய வாலிபன்' என சித்தரிக்கப்பட்டு அதிக தண்டனை உள்ள காவற்கூடத்தில் போடப்பட்டார். இவைகளின் நடுவில் சுமார் 13 ஆண்டுகள் ஒரு நாள் கூட தேவன் ஒரு சொப்பனமும் தரவில்லை. எந்தவிதமான அசரீய வார்த்தையும் கேட்டதில்லை. ஆனால் யோசேப் புடனேகூட தேவன் இருந்தார்.

வாக்குத்தத்தம்

"அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப் பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று உன் மீட்பர் சொல்லுகிறார்" ஏசா 54:8.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகரா யிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2020 ஜூலை மாத தூதனுக்காக என் தேவனை நன்றி யோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். முதலாவதாக 3 வாசகருடைய சாட்சிகளை கீழே அச்சிடுகிறேன்.

1. **பிரியமுள்ள சகோதரர் அவர்களுக்கு எழுதுவது**

தங்கள் பத்திரிகை மாதந்தோறும் வரும். தங்கள் பத்திரிகை மனதிற்கு ஆறுதலாகவும், ஜெபத்தைப் பற்றியும், எழுப்புதல் பற்றியும், ஊழியக்காரரை பற்றியும் அறிய முடிகிறது. தங்கள் பத்திரிகை ஆத்துமாவிற்கு பெலன் கொள்வதாக இருக்கிறது. எங்கள் குடும்பத்திற்காக வேண்டிக் கொள்ளுங்கள். தங்களுக்காகவும் பத்திரிகை ஊழியத்திற் காகவும் ஜெபித்துக்கொள்கிறோம். **A.G.M., CN 1965**

2. **அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு**

எனது அன்பின் தோத்திரங்கள்!

கடவுளின் பெரிதான கிருபையால் தங்கள் வருகையின் தூதன் ஊழியத்திற்கு அன்பு காணிக்கையாக செக் ரூ.1000 அனுப்புகிறோம். அன்புடன் பெற்றுக்கொண்டு எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். நாங்களும் உங்கள் ஊழியத்திற்காக ஜெபித்துக் கொண்டு வருகிறோம்.

காணிக்கை, ஊழியம் மற்றும் வருட சந்தா - 1000/-

ஜெப விண்ணப்பம் : ஐயா, நானும் (வயது 72) என் மனைவியும் (வயது 65) ஓய்வு பெற்ற ஆசிரியர்கள். இந்த வயது சென்ற நாட்களிலும் பூரண சுகம், பெலன், ஆசீர்வாதத்தோடு ஜீவிக்க கர்த்தரிடத்தில் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

குறிப்பாக என் மனைவி குடல் சம்பந்தமான நோயி னால் பீடிக்கப்பட்டு இப்போது குணமடைந்து வருகிறாள். இன்னும் பூரண சுகம் கிடைக்கவும், வீசிங் மற்றும் கடுமையான சளி - இருமல் இவற்றால் பாதிக்கப்பட்டும் குணமடைந்து வருகிறாள். இனியும் இந்த சளி - இருமல் வந்து பெலவீனப் படுத்தாதபடி கர்த்தரிடம் ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ள தாழ்மையாய் கேட்டுக்கொள்கிறேன். தேவரீருக்கே மகிமை உண்டாவதாக. **M.R.S., TJ 20**

3. ***Phone Message:*** கேரளாவில் சபை ஊழியம் செய்கிற இவருக்கு மனைவியும் 6 பிள்ளைகளும் இருக்கிறார்கள். தூரத்தினால் உபவாச ஜெபங்களில் கலந்துகொள்ள இயல வில்லை என கூறிய இந்த தேவ மனிதர் அவருடைய ஊழியத்திற்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுள்ளார். மேலும் வங்கி வழியாக ரூபாய் 500/- அனுப்பியுள்ள இவர் தூதனுக்கு ரூபாய் 200/-ம், உபவாச ஊழியத்திற்கு ரூபாய் 300/-ம் என தெரிவித்துள்ளார். **M.K.**

*****

ஏப்ரல் மாத தூதனை அச்சிடுவதற்காக அனைத்து ஆயத்தங்களும் செய்த சமயத்தில், மார்ச் 22 ஞாயிறு காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை முழு ஊரடங்கு என அறிவிக்கப்பட்டது. முதன் முதலாவதாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆலயங்களும் அடைக்கப்பட்டன. அதற்கு பிற்பாடு நடந்த அனைத்து சம்பவங்களையும் நீங்கள் அறிவீர்கள்.

ஏப்ரல் மாத பத்திரிகையை அச்சிடவோ, தபாலில் அனுப்பவோ இயலாமல் போனது. வங்கிகளில் மிகக்குறைந்த வேலையாட்களுடன் அவசர பணிகள் மட்டும் நடந்தது போல தபால் அலுவலகங்களிலும் மிகக்குறைந்த பணியாட்களுடன் பணம் கொடுக்கல் வாங்கல் மட்டுமே நடைபெற்றது. தூதன் போன்ற பிற பத்திரிகைகளையும் (Bulk Posting) எடுக்க இயலாது என்று கூறிவிட்டனர்.

இந்த சூழ்நிலையில் ஏப்ரல் மாதத்திற்காக தயாரிக்கப் பட்ட பத்திரிகையை, மாதம் மாத்திரம் ஜூன் என மாற்றி அச்சிட்டு அனுப்பினோம். "**மிக முக்கிய அறிவிப்புகள்**" என்ற பகுதியை மாத்திரம் சேர்த்தோம். எனவே கொரோனா பற்றி எதுவும் எழுதப்படவில்லை.

உங்களில் அநேகர், அநேக உபத்திரவங்களை அனுபவித்திருப்பீர்கள் என்று அறிவேன். கொரோனா வியாதியைக் குறித்த பயம், வேலைகளுக்கும் தொழில் களுக்கும் செல்ல முடியாதபடியினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, வாரத்திற்கு ஒருமுறையாவது ஆராதனைக்குச் செல்ல முடியாதபடியினால் ஏற்பட்ட மனவேதனை..... என்று அந்த பட்டியல் நீண்டு கொண்டே போகலாம். எரேமியா கூறுவதை கவனியுங்கள் :

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே,
அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை
தமக்கு காத்திருக்கிறவர்களுக்கும் தம்மை தேடுகிற ஆத்துமாக்களுக்கும் கர்த்தர் நல்லவர்
கர்த்தருடைய இரட்சிப்பிற்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது.
ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார்.
அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார்.

புலம்பல் 3:22, 25, 26, 31, 32

மூன்று காரியங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன்:

1. பஞ்சம் : அனேக ஊழியக்காரர்களின் பிரசங்கத்தை இந்நாட்களில் TV மூலமாக கேட்டிருப்பீர்கள். நானும் ஏதாவது எழுத வேண்டும் என்பதற்காக இதனை அடியேன் எழுத வில்லை. முழு அடைப்பிற்கு முன்னதாகவே சில நாட்களாக என்னுடைய மனதில் "பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும்" என்ற வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்து கொண்டே யிருந்தது. எனவே என்னிடத்தில் இருந்த கொஞ்ச பணத் தையும் செலவு செய்வதை நிறுத்தினேன்.

இந்த ஊரடங்கு நாட்களில் ஒரு நாள் குடும்ப ஜெபத்தில் சங்கீதம் 33:18, 19 வசனங்களை தியானித்தோம்.

தமக்கு பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்;

(3-ம் பக்கம் பார்க்க)

- **சுடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி
  வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
  VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
  Mobile : 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com
- **காசோலை** வழியாக காணக்கை அனுப்புவோர் (Cheque & Draft) **வெஸ்லி தேவதாசன்** என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.
- **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் (Net Banking) தயவாய் உடனே எங்களுகு SMS அனுப்புங்கள், அல்லது அலுவலக போன் நம்பர் 95432 21008 வழியாக தெரிவியுங்கள்.

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.:2131010118439
United Bank of India, Mead Street, Nagercoil-1 IFSC Code : UTBI0NGLP05

உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : IOBA0000063

(2-ம் பக்க தொடர்ச்சி)

பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்களின்மேல் நோக்கமாயிருக்கிறது.

"அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; தேசத்திலே பஞ்சம் கொடிய தாயிருந்தபடியால், ஆபிராம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்" ஆதி.12:10.

"ஆபிராமின் நாட்களில் உண்டான பஞ்சத்தை அல்லாமல், பின்னும் ஒரு பஞ்சம் தேசத்தில் உண்டாயிற்று; அப்பொழுது ஈசாக்கு பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கினிடத்தில் கேராருக்குப் போனான்" ஆதி.26:1.

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் சங்.23:1.

சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது சங்.34:10.

2. மரணம் (கொள்ளைநோய்) : தேவனுடைய பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டியதும், உரிமை பாராட்ட வேண்டியதுமான சங்கீதங்கள் 23, 46, 91.

சங்கீதம் 23:4 நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்.

சங்கீதம் 46:1-3 தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.

ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும்,

அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்.

சங்கீதம் 91:1,3,5-10 உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்.

அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் **கொள்ளை நோய்க்கும்** தப்புவிப்பார்.

இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,

இருளில் நடமாடும் **கொள்ளை நோய்க்கும்,** மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.

உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.

எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய்.

ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.

3. ஆத்துமா : (ஆராதனை) ஆண்டவருடைய கிருபையால் நாங்கள் குடும்பமாய் ஒரு ஆராதனைக்குப் போய் பங்கு பெற்றபின் தொடர்ந்து எனது இரண்டு பேர பிள்ளைகள் ஞாயிறு பள்ளியில் படிப்பார்கள். மருமகள் ஞாயிறு பள்ளி ஆசிரியையாகவும், மகன் ஞாயிறு பள்ளி டயரட்டராகவும் இருக்கிறார்கள்.

ஆனால் இந்த ஊரடங்கு நாட்களில் இணையதளம் வழியாக இரண்டு தமிழ் ஆராதனைகளிலும், கடைசியாக பெங்களூரிலிருந்து வெளியாகும் ஒரு ஆங்கில ஆராதனையிலும் கலந்து கொள்ளும் சிலாக்கியத்தையும், பாக்கியத்தையும் ஆண்டவர் அடியாருக்கு அளித்தார். பெங்களூர் ஆங்கில ஆராதனை அதிக ஆசீர்வாதமாயிருந்தது. "No never Alone" "Above all" போன்ற பாடல்கள் ஆத்துமாவை அசைக்க கூடியவையாயிருந்தது. மாதத்தின் முதல் ஞாயிறு ஆராதனையின் இறுதியில் பாஸ்டர் அப்பம் பிட்டு, திராட்சரசத்தைப் பானம் பண்ணும் போது நாங்களும் ஜெபத்தோடு கலந்து கொண்டோம், காணிக்கையும் சேகரித்தோம்.

..... நான் சர்வ வல்லமையுள்ள தேவன் ஆதி.17:1.

இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? எரேமியா 32:27.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
உதவி : 9489740295 **வெஸ்லி தேவதாசன்**
அலுவலகம் : 9543221008 (WESLEY DEVADASON)

நீங்கள் பரலோகத்திற்குப் பணத்தை எடுத்துச் செல்ல முடியாது; ஆனால் முன்னதாகவே அங்கு அனுப்பி வைக்கலாம்!

மிக முக்கிய அறிவிப்பு

காலஞ்சென்ற எனது தகப்பனார் பாஸ்டர் **S. தேவதாசன்** அவர்கள் 1970-ம் ஆண்டு வருகையின் தூதன் பத்திரிகைக்காக இந்தியன் வங்கியில் ஒரு சேமிப்பு கணக்கு ஆரம்பித்திருக்கிறார்கள்.

1991-ம் ஆண்டு வருகையின் தூதன் உதவி ஆசிரியராக என்னை நியமித்து, இந்தியன் வங்கிக்கும், தபால் அலுவலகத்திற்கும் கடிதம் கொடுத்தார்கள். 1999-ம் ஆண்டு வருகையின் தூதன் ஆசிரியராக என்னை நியமித்து, திரும்பவும் இந்தியன் வங்கிக்கும், தபால் அலுவலகத்திற்கும் கடிதம் கொடுத்தார்கள். இந்த இரண்டு கடிதங்களின் நகல் மட்டுமே என்னிடம் இருக்கிறது.

இந்த கூழ்நிலையில் 1970-ம் ஆண்டு ஆரம்பித்ததும், 1991-ம் ஆண்டு முதல் 2020 மேய் மாதம் வரை சுமார் 30 ஆண்டுகள் நான் இயக்கினதுமான இந்தியன் வங்கி கணக்கை முடக்கிப் போட்டார்கள். அந்த கணக்கில் இருக்கும் பணத்தை எடுக்க பிரயாசப்படுகிறோம். எனவே,

1. வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர் இந்தியன் வங்கிக்கு அனுப்பாமல் 2-ம் பக்கத்திலுள்ள United Bank of India வங்கிக்கு அனுப்பும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.
2. காசோலை வழியாக காணிக்கை அனுப்புவோர் (Cheque & Draft) **வெஸ்லி தேவதாசன்** என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி பட்சமாய் கேட்கிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
God Bless You

பரிசுத்த வாழ்வுக்காக அவரப் பின்பற்றுதல்
Following him unto Holiness

Gean Nicalas Grou

"கர்த்தாவே உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளியினிமித்தம், செவ்வையான பாதையிலே என்னை நடத்தும்" சங்.27:11.

தேவன் ஒருவரே பரிசுத்தர். அவர் ஒருவரே தமது பிள்ளைகளை தூய்மையின் பாதைகளில் நடத்த அறிந்திருக்கிறார். உங்கள் ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியையும், இருதயத்தின் எண்ணங்களையும், உங்கள் இரகசியங்களையும், உங்கள் கடினங்கள், தடைகள் போன்ற யாவற்றையும் அவர் அறிவார். அவரது சித்தத்தின்படி உங்களை வனையவும் முழுமையான சுத்திகரிப்புக்கு வழிநடத்தவும் அவர் அறிவார்.

இந்த நம்பிக்கையின் விளைவுகள் முற்றிலும் உணர்ந்து கொள்ளப்பட்டால் உங்கள் வாழ்வு முழுவதிலும் மாற்றம் ஏற்படும். இன்னும் அதிகம் அதிகமாக உங்களை ஆண்டவருக்கு ஒப்புவிப்பீர்கள். எதையும் கேட்கவோ மறுக்கவோ மாட்டீர்கள். அவர் சித்தம் செய்வதைத் தவிர எதையும் விரும்பமாட்டீர்கள். உங்களுக்காக எதையும் தேடமாட்டீர்கள். அவர் அனுப்புவதை சந்தோஷமாகப் பெற்றுக் கொள்வீர்கள். உங்களுக்கு முன் வைக்கப்படும் 'ஒரு அடி' மட்டும் போதும் என்ற நம்பிக்கையுடன் வாழ்வீர்கள்.

சீர்தனைக்கு

எனக்கு மிகுந்த தயாளகுணமுள்ள ஒரு தந்தை (இயேசு) இருப்பதால் நான் மிகுந்த நன்றியுடனிருக்கிறேன். ஏற்கெனவே அவர் என்னை தமது ஈவுகளால் அதிகமதிகமாக ஆசீர்வதித்திருக்கிறார். நீங்களும் இப்படிப்பட்ட அனுபவத்தை உடையவர்களாயிருப்பீர்கள் என நம்புகிறேன். எனது பரம பிதாவின் தயாள குணத்திற்கு முன்பாக இவ்வுலக பிதாக்களின் தயாள சிந்தை மிக மிக அற்பமானது.

(1-ம் பக்க தொடர்ச்சி)

மனிதரிடமும் வல்லமையைக் காண்பிக்க முடியும் மத்.5:29-30.

அறிக்கையிடப்படாத பாவம் மன்னிக்கப்படாமலும், மிக இருண்டதுமான சாபம் நிறைந்த பாவமாக நம்மிலிருக்கும்.

பாவம் செய்து கொண்டிருப்பவன் உத்தமமாயிருக்க முடியாது. ஆனாலும் தேவன் உத்தமராயிருந்து அவனையும் ஆசீர்வதிக்கிறார். "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்" சங்.51:17. 'துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது. செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" நீதி.15:8. "தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும், வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்" சங்.139:23-24.

இந்த ஜெபத்தை ஒவ்வொரு நாளும் நாம் சொல்வோமானால் நமது வாழ்வில் பெரிய மாற்றங்கள் நிகழும்.

என் அயலானையல்ல என்னை ஆராய்ந்து பாரும்

பிறருக்காக ஜெபிப்பது எளிது, ஆனால் நமக்காக ஜெபிப்பது அவ்வளவு எளிதல்ல. கர்த்தருடைய பணியில் ஈடுபட்டிருக்கும் நாம் நமது சொந்த திராட்சத் தோட்டத்தைப் பராமரிக்காத ஆபத்து இது உன். 1:6.

தேவன் நம்மை ஆராய்ந்து பார்ப்பதற்கும், நாமே நம்மை ஆராய்ந்து பார்ப்பதற்கும் வேறுபாடு உண்டு. நாம் எல்லாம் சரியாயிருக்கிறது என்று சொன்னாலும் தேவன் ஆராய்ந்து பார்க்கும்போது நாம் சற்றும் அறியாத குறைகள் வெளிச்சத்திற்கு வந்துவிடும்.

என் நினைவுகளை அறிந்து கொள்ளும்

தேவன் நமது எண்ணங்களையும் கவனிக்கிறார், அவைகள் சுத்தமானவைகளா? தேவனுக்கு விரோதமாகவோ அல்லது வேறு யாருக்கேனும் விரோதமாகவோ தீய எண்ணங்கள் நம்மில் உண்டா? தீய எண்ணங்கள், சிந்தனைகள் நம்மில் இருக்குமானால் தேவனுடைய பார்வையில் நாம் சரியானவர்களல்ல.

தேவன் நம்மை ஆராய்ந்து பார்க்கும்போது, நாம் அறிக்கை செய்யாத அனேக பாவங்கள் நம்மில் கண்டுபிடிக்கப்படலாம். நம் வாழ்வில் நாம் மாற்றியமைக்க வேண்டிய பல காரியங்களும் காணப்படலாம். தேவ பிள்ளைகள் அனேகர் குறையுடையவர்களாயிருந்திருக்கின்றனர். எனவே நாம் நடுக்கத்துடனே அவர் முன்பாக வந்து அவர் விரும்பாத ஏதேனும் தவறுகள் நம்மிலுண்டா என்பதை அவரே ஆராய்ந்து பார்க்க அனுமதிப்போம்.

இன்னொரு முறை தாவீதின் பாவ அறிக்கை சங்கீதத்தின் சில வசனங்களைப் படிப்போம் சங்.51:1-4; 7-13.

பல வருடங்களுக்கு முன்பு எனது ஒரு நண்பர் இந்த சங்கீதத்தை ஒவ்வொருநாளும் பலமுறை கூறுவதாக என்னிடம் கூறியதை நினைவுகூருகிறேன். நாமும் அடிக்கடி இந்த சங்கீதத்தை நமது பாவ அறிக்கையாக ஏறெடுப்பது நலம். அது நமது இருதய ஆழங்களிலிருந்து எழும்பட்டும்.

நம்மிடம் பெருமை, எரிச்சல், பொறுமையின்மை போன்ற தன்மைகள் இருந்தால் அவற்றை உடனடியாக அறிக்கை செய்வோம். நமது வீடுகளிலிருந்து இந்த செய்தி அடுத்த வீடுகளுக்குப் பரவட்டும். தேவனை அறியாத வர்களும் இதன் மூலம் வாழ்வைக் குறித்து தெரிந்து கொள்ள முடியும். பெற்றோரே, உங்கள் இல்லம் தூய ஆவியால் நிரப்பப்பட்டு, உங்கள் பிள்ளைகளும் அதே அனுபவத்தில் வர ஜெபியுங்கள்.

வெதுவெதுப்பான நிலையால் கிறிஸ்தவ சபை இன்று, அவிசுவாசிகள் எழுதிய புத்தகங்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான அவிசுவாசிகளை உருவாக்குகிறது. அவிசுவாசிகளின் மேடைப் பேச்சை விட இன்றைய பேர்க் கிறிஸ்தவர்களால் நிரம்பிய சபைதான் பயத்தை உண்டுபண்ணுகிறது. சீஷர்கள் அன்று அனுபவித்த பெந்தேகோஸ்தே நாளின் ஒரே ஒரு கூடுகையால் அவிசுவாசிகள் அசைக்கப்பட முடியுமே.

உங்கள் பிரசங்கங்களால் மக்களை ஆதாயம் பண்ண முடியாது. இவ்வுலகை அசைக்கிற தேவ கரத்தை அசைக்க நாம் ஜெபிக்க வேண்டும். அதற்காக நமது வாழ்வு தேவனுக்கு முன்பாகச் சரியாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும்.

பிரியமானவர்களே, நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்கிறதா? "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்கிறதெதுவோ, அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம்" 1 யோவா.3:20-22.

மனந்திரும்பும் இருதயங்களுக்கான ஒரு அழைப்பு

A call for repentant hearts

Nancy DeMoss Wolgemuth

நாம் நமது தேசத்திற்காக கதறி அழுது ஜெபிக்க வந்திருக்கிறோம். நமது தேசத்தில் பரவி வரும் தீமைகளின் அலையை மனித முயற்சிகளால் தடுக்க இயலாது. எனவே தேவன் தலையிட்டு தேசத்தின் அந்தகாரத்தையும், இழந்து போன நிலையையும் மேற்கொள்ளும்படி ஜெபிக்க வேண்டும்.

எனினும் எல்லா ஜெபங்களையும் தேவன் அங்கீகரிப்பதில்லை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். சில கூடுகைகளில் தேவன் பிரசன்னமாயிருப்பதில்லை. எல்லா உபவாச ஜெபங்களிலும் அவர் பிரியப்படுவதுமில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் உபவாசித்து ஜெபிக்க வந்த போது அவர்களது கரங்களும் இருதயங்களும் அசுத்தமாயிருந்தன. எனவே தேவன் கோபத்தோடு பேசினார். "ஆகையால் நானும் உக்கிரத்தோடே காரியத்தை நடத்துவேன். என் கண் தப்பவிடுவதில்லை, நான் இரங்குவதில்லை. அவர்கள் மகா சத்தமாய் என் செவிகள் கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவி கொடுப்பதில்லை என்றார்" எசேக்.8:18. "நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களை விட்டு விலக்குகிறேன். நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன். உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது" ஏசா.1:15. ஆக தாழ்மையும் மனந்திரும்புதலுமில்லாத வர்களின் ஜெபம் உபவாசம் ஆகியவை கர்த்தருக்கு அருவருப்பானவை.

மனந்திரும்புதலின் தேவையை ஒத்துக்கொள்ள நாம் முந்திக்கொள்ள வேண்டும். பிறருடைய பாவங்களைக் கண்டுபிடிக்க ஆயத்தமாயிருக்கிற நாம் நமது சொந்த இருதயத்தின் கேடுபாடுகளை கண்டு கொள்வதில்லை. உலகத்தின் பாவங்களைச் சுட்டிக் காண்பிக்கிற நாம் அதே பாவம் நமது சபையிலிருப்பதை ஏன் கண்டு கொள்ளாமலிருக்கிறோம்?

பாவம் அரசியலிலும், சினிமாத் துறையிலும், கல்லூரி வளாகத்திலும், பேர்க்கிறிஸ்தவர்கள் மத்தியிலும் மட்டுமே இருக்கிறது என்ற எண்ணம் ஆபத்தானது. வேதத்தை நாம் நன்கு புரட்டிப் படிக்கும்போது, கடிந்து எச்சரிக்கும் வார்த்தைகள் அங்கு புற ஜாதிகளுக்கல்ல, தேவபிள்ளைகளுக்கே அனேகமாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஏசா.1:2; 4-6 வசனங்களைப் படியுங்கள்

பழைய ஏற்பட்டில் தேவனுடைய இருதயம் தனது தெரிந்து கொள்ளப்பட்ட ஜனத்தின் வழிவிலகுதலால் துக்கமடைவதாகவும், அவர்கள் மனந்திரும்ப அழைக்கப்பட்டபோது மறுத்ததால் பரலோகம் அவர்களைக் கடின இருதயத்திற்கு தண்டனையாக ஒப்புக் கொடுத்ததையும் நாம் படிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் தமது காலத்தில் வாழ்ந்த பெயர்பெற்ற மார்க்கத் தலைவர்களின் நீண்ட ஜெபம் உபவாசம் ஆகியவற்றைக் குறித்து "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" மத்.15:8 என்கிறார்.

இயேசுவின் இவ்வுலக ஊழிய ஆரம்ப வார்த்தைகள் 'உபவாசித்து ஜெபியுங்கள்' என்பதல்ல, 'மனந்திரும்புங்கள்' என்பதே மத்.4:17.

இயேசு பரத்துக்கெழுந்தருளிய போது பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து உலக சபைகளைப் பார்த்து, சுவிசே

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

ஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கூறாமல் மனந்திரும்பும்படி கூறினார். மனந்திரும்பாத சபை ஆண்டவரது மிகப்பெரிய கட்டளையை நிறைவேற்ற முடியாது.

ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட ஆவியானவரின் வெளிப்படுத்துதலில் முதலாம் சபைக்குக் கூறப்பட்டது, ஆதியிலிருந்த அன்பை விட்டு விட்டதாகும். அது ஆவிக்குரிய விபச்சாரம். எனவே அது மனந்திரும்புதலுக்கு அழைக்கப்படுகிறது. சர்தை சபை உயிருள்ளதென்று பேர்பெற்றிருந்தும் செத்ததாயிருந்ததால் அந்நிலையிலிருந்து மனந்திரும்பும்படி கண்டிக்கப்பட்டது. லவோதிக்கேயா சபை தன்னைக் குறித்துப் பெருமையாக எண்ணிக்கொண்டிருந்தாலும் அது நிர்ப்பாக்கியமானதும், நிர்வாணியும், கண்பார்வையற்றதும் தரித்திரம் நிறைந்ததுமாயிருந்ததென வெளிப்படுத்தப்பட்டு மனந்திரும்பும்படி அழைக்கப்பட்டது.

இன்று ஆண்டவராகிய இயேசு தனது அன்பின் மணவாட்டியாகிய சபையைப் பார்த்துக் கேட்பது,'எச்சரிக்கையாயிருந்து மனந்திரும்பு' என்பதாகும். இல்லாவிட்டால் அதனிடமிருந்து விளக்குத் தண்டு எடுக்கப்பட்டுவிடும் என எச்சரிக்கப்படுகிறது.

எசேக்கியேல் 8, 9 அதிகாரங்களில் தேவன் தமது ஊழியக்காரனை தரிசனத்தில் எருசலேம் தேவாலயத்திற்குள் கொண்டு செல்வதைப் படிக்கிறோம். அங்கே பல தடவைகள் தேவன் எசேக்கியேலிடம் 'பார் உள்ளே என்ன நடக்கிறது என்று காண்கிறாயா?' என்று கேட்கிறார். ஏனெனில் ஆலயத்தின் நடுப்பகுதியில் அருவருப்பான காரியங்கள் நடந்தன.

எல்லாவற்றையும் காண்கிற தேவனுடைய கண்கள் நமது சபைகளில் எதைக் காண்கின்றன என்பதை நாம் உணர தேவன் உதவி செய்ய ஜெபிப்போம். அந்தக் காட்சி அருவருப்பாகவும், வேதனை தருவதாகவுமிருந்தால், தேவன் நமக்கு உதவி செய்யவும், நாம் அவருக்கு முன்பாக உத்தமமாக நடந்துகொள்ள நம்மை அவரிடம் ஒப்புவிப்போம்.

நாம் உலகத்துக்கு ஒத்து வாழுகிறோம். நமது வாழ்க்கை முறை, சிந்தனைகள், பார்வை, பேச்சு, ஊழிய நடைமுறை யாவும் உலகத்துக்கொத்தவைகளாகவே இருக்கின்றன. உதாரணமாக திருமண உறவின் முறிவுகளின் எண்ணிக்கை சபைக்கு வெளியே காணப்படுவதை விட சபைக்குள்ளே மிக அதிகமாயிருக்கின்றன.

நாம் உலகத்தின் தத்துவங்களையும், பழக்க வழக்கங்களையும் விலைக்கே வாங்கி விட்டோம். உலக மக்கள் எப்படி வாழ வேண்டுமென்று சபை சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக உலகம் சபைக்குப் போதிக்க வேண்டியதாயிற்று. கலாச்சாரம் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரப்படுவதற்குப் பதிலாக சபை கலாச்சாரத்திற்கு இட மளித்துவிட்டது.

எனவே சபையும் ஊழியமும் வியாபாரமாகிவிட்டன. நிறுவனங்களை நடத்துவதும், வியாபார கொள்கைகளும் தாழ்மை, பரிசுத்தம், விசுவாசம் ஆகிய வற்றைத் தாண்டி நிற்கின்றன. அனேக போதகர்களும், கிறிஸ்தவ தலைவர்களும் ஆவிக்குரிய மேய்ப்பர்களாயிருப்பதற்குப் பதிலாக அரசாங்க அதிகாரிகளைப் போலிருக்கின்றனர்.

இழந்து போனவர்களைக் கவர்ந்து கொள்ள நமக்குத் தெரிந்த அனைத்து உலக வழிமுறைகளையும் கையாண்டுவிட்டோம். நமது தனித்துவத்தையும், பிரயாசத்தின் பலனையும் பெரும்பாலும் இழந்தோம். நாம் பயன்படுத்தும் முறைகள் தேவனுடைய வழிக்கும், வார்த்தைக்கும் ஒத்திருக்கிறதா என்று சீர்தூக்கிப் பாராமல் தொடர்ந்து செயல்படுகிறோம். எந்த பயனுமில்லை.

கிறிஸ்தவம் என்பதை ஒரு வேடிக்கையாகக் காண்பிக்க முயற்சிக்கிறோம். வேடிக்கை நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் திரள் கூட்டமான மக்கள் ஏன் ஜெபக்கூடுகைகளில் பங்குபெறுவதில்லை? ஆடல் பாடலின்றி மக்களைக் கூட்டமுடியாது என்று கவலை ஏன்?

தேவனுடைய வல்லமைக்கு என்ன ஆயிற்று?

நாம் ஜெபத்தையும் தூய ஆவியானவரையும் சார்ந்து வாழ்வதற்குப் பதிலாக வழிமுறைகளையும் திட்டங்களையும் மேன்மைப்படுத்துகிறோம்.

தேவ வசனம் பாவ உணர்வை ஏற்படுத்தும். சுவிசேஷம் மனமாற்றத்தைக் கொண்டுவரும். ஆவியானவர் மக்களைக் கிறிஸ்துவிடம் இழுத்துக் கொள்ளக்கூடியவர் என்ற உறுதி நமக்கு வேண்டும். மனித முயற்சிகள் எவற்றைச் செய்ய இயலும், பணத்தால் எதை சாதிக்க முடியும், ஸ்தாபனங்கள், முன்னேற்றப்பணிகள் ஆகியவை என்ன செய்ய முடியும் என்பதையெல்லாம் அறிந்து கொண்டோம். எனவே தேவனால் எவற்றை செய்யக்கூடும் என்று கவனிப்பது அவசியம்.

பொதுமக்களோடு அதிக தொடர்பிருப்பதால் அவர்கள் நம்மை எப்படிப் பார்க்கிறார்கள் என்று சிந்திக்கிறோம். ஆனால் தேவன் நம்மை எப்படிப் பார்க்கிறார் என்று நாம் சிந்திப்பதில்லை. தேவனுடைய மகிமையைப் பார்க்கிலும் நமது பேர்பிரஸ்தாபத்தை அதிகமாக எதிர்பார்க்கிறோம். ஆத்துமாக்களைத் தேடும் பணியில், தேவனைத் துக்கப்படுத்தினாலும் மக்களை துக்கப்படுத்திவிடக்கூடாது என்று சிந்திக்கிறோம். மக்கள் 'நல்லவர்கள்' என்று எண்ணப்படுவதை விரும்பும் நாம் அவர்கள் சரியாக நடக்கிறார்களா என்பதில் கரிசனை கொள்வதில்லை. சபையைக் குறித்தும் தங்களைக் குறித்தும் ஜனங்கள் நல்ல அபிப்பிராயம் கொள்ள வேண்டுமென்ற சிந்தனையை விட தூய ஆவியானவரை துக்கப்படுத்தி அவருடைய கோபத்திற்கு ஆளாகியிருப்பதைக் குறித்த அக்கரையில்லை.

கலாச்சாரம் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரப்படுவதற்குப் பதிலாக சபை கலாச்சாரத்திற்கு இட மளித்துவிட்டது.

மக்களுக்கு பயந்து தேவ வசனத்தை அரைகுறையாகக் கூறுகிறோம். நமது கோழைத்தனம், விவாகரத்துக்கள், மறுமணம் போன்றவற்றால் கிறிஸ்தவ குடும்பங்கள் ஆயிரமாயிரமாய் சீர்குலைந்துவிட்டன. நாம் தேவனுக்கு எதிராக நிற்கிறோம் என்பது தெளிவாகத் தெரிகிறது. சுருங்கக் கூறின் தேவன் வெறுக்கும் காரியங்களைச் செய்து கொண்டு, நாம் எல்லாவற்றையும் சரியாகவே செய்ததாக முடிவுபண்ணுகிறோம்.

பொருளாதார லாபத்திற்காகவும் உலகத்தால் அங்கீகரிக்கப்படுவதற்காகவும் கிறிஸ்துவின் சுவிசேஷம் வியாபாரப் பொருளாக்கப்படுகிறது.

பரிசுத்தமாய் தனித்து வாழ்வதற்குப் பதிலாகக் கூட்டு வாழ்வை ஏற்படுத்திக் கொண்டோம். பாவத்தை இது பாவம் என்று அதன் பெயரைச் சொல்லவோ அல்லது ஒரு உபதேசத்தின் தவறைச் சுட்டிக் காண்பிக்கவோ செய்தால் அது சபையைப் பிளவுபடுத்துவது என்றும், அன்பற்ற செயல் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

இந்த மென்மையான சுய நோக்கு தலைமுறைக்கு கிறிஸ்தவத்தை சுவையாக அளிக்கும் முயற்சியில் நாம் சுவிசேஷ செய்தியினை கலப்புள்ளதாக்கி விட்டோம். எனவே பாவநிவிர்த்திக்கு பக்க வழி உண்டுபண்ணி சிலுவை, பாவ உணர்வு, மனந்திரும்புதல் ஆகியவை நிராகரிக்கப்படுகின்றன. நாம் கொடுக்கும் செய்தி சமயத்திற்கு ஏற்றபடி இருக்க சுவிசேஷம் அல்லாத 'வேறொரு சுவிசேஷத்தை' பிரசங்கிக்கிறோம். சிலுவை சுமந்து இயேசுவைப் பின்பற்ற மக்களை அழைப்பதற்குப் பதிலாக நிறைவேறுதல்களைக் காணும்படியாகப் பிரசங்கிக்கப்படுகிறது.

பலவேளைகளில் எண்ணிக்கையைக் கூட்டுவதில் நாம் கவனம் செலுத்துகிறோம். ஆனால் மனந்திரும்புகிறவர்களின் கரமான வாழ்வைக் குறித்து நாம் அக்கரை கொள்வதில்லை. சபை ஆஜர் பதிவேடுகளில் ஏராளமான பெயர்கள் இருக்கின்றன. இவர்கள் தாங்கள் மனந்திரும்பிய இடத்தையும், நாளையும் குறிப்பாகச் சொல்வார்கள். ஆனால் கிறிஸ்துவோடு பெற்ற இரட்சிப்பின் உறவையும் அதின் உண்மையான நிரூபணத்தையும் அவர்களால் கூற முடியாது.

சபைக்குள்ளும் வேதவசனத்தின் படி வாழ்வதில் தவறிவிட்டோம் என்பதை ஒத்துக் கொள்வதில்லை. கீழ்ப்படிகிறோம் என்று சொல்லுகிறவர்கள் அதின்படி நடக்கிறதில்லை. **எடுத்துக் காட்டாக பாவமன்னிப்பைப் பெற்ற நாம் பிறருக்கு மன்னிக்க மறுக்கிறோம்.** நமது வீடுகளிலும், ஊரிலும், ஊழியம் செய்யுமிடங்களிலும் சண்டைகளோடு வாழுகிறோம். ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் அந்தஸ்து நம்மால் உதாசீனப் படுத்தப்படுகிறது. தாலந்துகளை தேவ பயத்துக்கு மேலாக உயர்த்தி அதனால் தேவனுக்கு தூரமாயிருப்பவர்களை உயரிடங்களில் வைக்கிறோம்.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

அறிந்து செய்கிற பாவங்களையும் மறைக்கிறோம். ஒரு சில சபைகள் மட்டுமே வேத அடிப்படையிலான உபதேசங்களைப் பின்பற்றுகிறார்கள். மனந்திரும்ப மனமில்லாத பேர்க்கிறிஸ்தவர்கள் சபைகளின் அங்கத்தினராயிருக்க அனுமதிக்கப்படுவது ஏன்?

பாவம் செய்ய நாம் வெட்கப்படவில்லை. செய்த பாவங்களுக்காகக் கதறி அழ நமக்கு சக்தியில்லை. நமது வார்த்தைகள் நமது பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன. மக்கள் பாவத்தில் விழுந்துவிட்டார்கள் என்று பேசுகிற நாம் அவர்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற சமரச பாதையைத் தெரிந்து கொண்டு விட்டார்கள் என்று சொல்லுவதில்லை.

இந்நாட்களில் கிறிஸ்தவ பெண்களும் நற்குணங்களில் மிகவும் பின்தங்கி விட்டார்கள். தாழ்மையும் அமைதலுமான ஆவிக்குப் பதிலாக கோபமும் மற்றவர்களை அடக்கி ஆளும் தன்மையும் மேலோங்கிவிட்டன. தேவன் நமக்களித்த பங்கை நிறைவேற்றுவதற்குப் பதிலாக இல்லங்களிலும், சபையிலும் ஆட்சியைக் கரங்களில் வைத்திருக்கிறோம்.

கிறிஸ்தவத்தின் மைய பண்பான தேவபயம் அற்றுப்போயிற்று. ஆலயம் செல்லும் ஆயிரமாயிரமான மக்கள் தேவவசனத்தைக் கேட்டும் எந்த மாற்றமும், அசைவுமில்லாமல் இருக்கின்றனர். **விசுவாசிகள் என்று அழைக்கப்படுகிறவர்கள் தூய்மையைக் கடைபிடிக்தால் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பாக உட்கார்ந்து தேவனற்ற காரியங்களைப் பார்த்துக் கொண்டிருப்பது கூடுமா?** ஆண்டவருடைய வசனத்தை வாசித்து அதற்கு நடுங்குவோமாக.

நமது வாழ்வு சத்தியத்திற்கும் தேவவல்லமைக்கும் சிறிதளவும் சாட்சியில்லாமலிருக்கும்போது நம்மை கவனித்துக் கொண்டிருக்கும் உலகம் நமது செய்தியை ஏற்றுக்கொள்ளுமா?

நமது பிரச்சனைகளுக்குக் காரணமாயிருப்பது ஆபத்தானதும் பயங்கரமானதுமான நமது பெருமையென்றால் தவறல்ல. நாம் உபதேசத்தில் சரியாயிருக்கலாம், கணக்குப் பார்ப்பதில் திறமையுடையவர்களாயிருக்கலாம், சன்மார்க்க நெறிதவறாமல் நடக்கலாம், பேரும் புகழும் பெற்றவர்களாயிருக்கலாம், தியாகத்தோடு பணி செய்கிறோமென்ற பெருமை நம்மிலிருக்கிறது, அது போதாதே.

பெருமையின் காரணமாக சுயநீதியுடையவர்களாகவும், நம்மையே வாழ்த்துகிறவர்களாகவும், சுயதிருப்தியுடையவர்களாகவும் ஆகிவிடுகிறோம். நமது உண்மையான நிலையையும் மிகப் பெரிய நமது தேவையையும் பெருமை மறைத்துவிடுகிறது. தேவனுக்குப் பயப்படுவதை விட மனிதனுக்குப் பயப்படச் செய்கிறது. நம்மைப் பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கச் செய்து போட்டி ஆவியையும் விமர்சன ஆவியையும் உருவாக்குகிறது. சபையிலிருந்து இயேசுவின் ஜீவன் வெளியேற்றப்படக் காரணமாயிருக்கிறது.

இந்தப் பாவங்களை நாம் அட்டவணைப்படுத்தும்போது நம்மில் சிலர் நாங்கள் தேவனுடைய வார்த்தைகளையும், வழிகளையும் விட்டு விலகவில்லை என்று கூறலாம். அப்படிப்பட்டவர்களுக்கு சமீப நாட்களில் தேவன் என்னிடம் கேட்டுக் கொண்டிருந்த சில கேள்விகளைக் கேட்கிறேன்.

தேவனிடம் மிக நெருக்கமாயிருந்தால் உங்களிடம் ஆழமான அன்பு இருக்கிறதா? கிறிஸ்துவின் நெருக்கி ஏவுதல், அபிஷேகம், அக்கினி ஆகியவை எங்கே? கண்ணீர், துக்கம், புலம்பல், அழுகை ஆகியவை எங்கே? இருதயம் வறண்டு காணப்படுவது ஏன்? ஆத்தும பாரத்தால் பெருமூச்சுவிடும் ஆத்தும வியாகுலம் எங்கே?

"தேவனே மக்கள் உமது நியாயப் பிரமாணத்தைக் காலால் மிதித்தபடியால் நீர் எழுந்து கிரியை செய்யும்" என்று தாவீதோடு சேர்ந்து கண்ணீர் விடுகிறவர்கள் எங்கே? "தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி உருகும் அக்கினி எரியுமாப் போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப்போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்" ஏசா.64:2. "உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்" சங்.80:19 என்றெல்லாம் தமது பிள்ளைகளோடு சேர்ந்து ஜெபிப்போமாக.

"உமது வேதத்தை விட்டு விலகுகிற துன்மார்க்கர் நிமித்தம் நடுக்கம் என்னைப் பிடித்தது" சங்.119:53 என்று உலகிலும், சபையிலும் நம் சொந்த வாழ்விலும் காணப்படும் பாவங்கள் அருவருக்கப்படுகிறதா? தேவஜனம் தேவனை விட்டு விலகியபடியால் இருதயம் நொறுங்கி கண்கள் கண்ணீரால் நிரம்பிய எரேமியா போன்ற மக்கள் எங்கே?

தமது தலைமுறை மக்களுக்காகத் தங்கள் பேரையும், புகழையும், தங்கள் பொருளையும், சமுதாயத்தின் ஏற்பையும் தியாகம் செய்த தீர்க்கர்கள் எங்கே? சபை தன் உணர்வற்ற நிலையிலிருந்து எழும்புவதற்காக எச்சரிப்பின் ஒலியை எழுப்பி அதனை விழிக்கச் செய்கிற தேவ பிள்ளைகள் எங்கே?

எரேமியா 23:29-ல் கூறப்பட்டது போல தேவனுடைய வார்த்தை சம்மட்டியைப்போல பாறை போன்ற இருதயங்களைத் துண்டு துண்டாக உடைக்குமே. நெருப்பைப் போல இருதயத்தை உருகச் செய்யுமே. அப்படியானால் இன்றைய பிரசங்கங்கள் மூலம் ஏன் மக்களில் பாவ உணர்வும் இருதய நொறுங்குதலும் ஏற்படவும், தெய்வீக அக்கினி இறங்கவும், ஆவியானவரின் அபிஷேகத்தால் மக்கள் நிரப்பப்படவுமில்லை?

நித்தியத்தைப் பற்றியும், அங்கு ஆத்துமாக்களின் நிலை பற்றியும் பேசப்படும்போது மக்களிடம் அவசரமும், பயபக்தியும் ஏற்படவில்லையே. நியாயத் தீர்ப்பு, தேவனுடைய கோபம் ஆகியவற்றைக் குறித்துக் கேட்டாலும் ஆழ்ந்த பயம் இல்லாமலிருக்கிறதே!

நமது ஆண்டவராகிய இயேசுவின் அன்பு, அழகு, கிருபை ஆகியவை எளிமையாகவும், ஆத்தும பாரத்தோடும் எடுத்துக் கூறப்படுகிறதா? மக்களின் மனம் அவற்றில் ஈடுபட்டு இருதயம் கவர்ந்து இழுக்கப்படுகிறதா?

கர்த்தருடைய பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட அக்கினித் தழலால் பற்றி எரியும் இருதயங்கள் எங்கே? அப்படிப்பட்ட மோசே மலையில் அவரோடிருந்து அவருடைய வார்த்தையை அவர் சமூகத்திலிருந்து கேட்டு விட்டு இறங்கி வந்தபோது முகத்தில் தேவ மகிமை பிரதிபலித்ததே. அவனது உள்ளத்திலிருந்து வல்லமை புறப்பட்டதே. அத்தகைய தேவ மனிதர்கள் எங்கே?

என்னுடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஆரம்பியுங்கள்

தேவாலயத்தின் உட்பிரகாரத்தில் நடப்பிக்கப்பட்ட அருவருப்புகளை தேவன் எசேக்கியேலுக்குக் காண்பித்த பின்பு, அரையில் மைக்கூட்டுடன் ஒரு மனிதனை பரிசுத்த ஸ்தலத்திற்குள் அனுப்புகிறார். அவனிடம், "நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய் அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிடுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்" எசேக்.9:4. பின்பு ".... நீங்கள் இவன் பின்னாலே நகரமெங்கும் உருவப்போய் வெட்டுங்கள் ..... என் பரிசுத்த ஸ்தலத்தில் துவக்குங்கள் என்று என் காதுகள் கேட்கச் சொன்னார்" எசேக்.9:5-6

அங்கு இருவிதமான மக்கள் காணப்பட்டனர். ஒரு கூட்டத்தினர் பிரச்சனைக்குக் காரணமாயிருந்தவர்கள். மற்றொரு கூட்டத்தினர் மனந்திரும்பிய இருதயத்தோடு துக்கப்பட்டு அழுது ஜெபித்தவர்கள். இடைத்தரமான மக்களில்லை.

பாவம் செய்கிற மக்களால் மனபாரம் கொண்ட மக்கள் அழுது புலம்பினால், தனது மணவாட்டி வேசித்தனம் பண்ணி கறைதிரையும் கந்தலுமான கலியாண ஆடையுடன் நிற்பதைக் கண்டு மணவாளன் எத்தனை பாரமடைவார்! அவர் நமக்காகப் பாவமானார். அவருடைய நீதியால் நாம் நீதிமான்களாக்கப்பட்டோம். அவர் தமது விலையேறப்பெற்ற பரிசுத்த இரத்தத்தை சிந்தி நம்மை தூய மணவாட்டியாக விலைக்கு வாங்கினார். இந்நிலையில் தனது அருமை மணவாட்டியின் கறைப்பட்ட ஆடையால் அவர் உள்ளம் எத்தனையாக வேதனைப்படும்!

தேவனுடைய இருதயத்தை நொறுக்கும் செயல்கள் நமது இருதயங்களை நொறுக்க வேண்டும். நாம் தேவாலயத்தில் நடைபெறுகிற அருவருப்பான காரியங்களுக்காகப் பெருமூச்சு விட்டு அழுகிறவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவருடைய தண்டனைக்கு நியமிக்கப்பட்ட திரளான

(7-ம் பக்கம் பார்க்க)

சிந்தனைக்கு

உலக மக்கள் எப்படி வாழவேண்டுமென்று சபை சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக உலகம் சபைக்குப் போதிக்க வேண்டியதாயிற்று.

(6-ம் பக்க தொடர்ச்சி)

மக்களுக்கு வைக்கப்பட்ட ஆபத்து நமக்கும் உண்டு. எனவே மனந்திரும்ப வேண்டும்.

தேவன் நம்மை மனந்திரும்புதலுக்கு அழைக்கிறார். முதலாவது நமது பாவங்களுக்காக துக்கித்து அழுது புலம்ப வேண்டும். நாம் நம்மைத் தாழ்த்தி நமது பொல்லாத வழிகளிலிருந்து திரும்பாவிடில் நமது தேசத்திற்காக ஏறெடுக்கப்படும் ஜெபம் கேட்கப்படாது. தேவனுடைய வீட்டில் நியாயத்தீர்ப்பு ஆரம்பமாகும் காலம் வந்துவிட்டது 1பேது. 4:17. நாம் ஒவ்வொருவரும் தேவ சன்னிதானத்தில் முழுங்காற்படியிட்டு நம்மைத் தாழ்த்தும்படி ஆலோசனை தருகிறேன். தேவன் நமது இருதயங்களை ஆராய்ந்து பார்க்கட்டும்.

நாம் இணைந்து ஜெபிப்போம்! "தேவனே, எனது சகோதரனோ, சகோதரியோ, போதகரோ, சபை மூப்பனோ, எனது சபையோ அல்லது யாதொரு ஊழியரோ அல்ல நானேதான் பாவம் செய்தேன். உமது தூய ஒளி என் இருதயத்தின் ஆழமான பகுதிகளுக்குள் பிரகாசிக்கட்டும். நான் செய்த பாவத்தை நீர் எனக்குக் காண்பியும். பிரச்சனையின் தீர்வுக்குக் காரணமாக ஒரு பகுதியாக அல்ல, பிரச்சனைக்கே முழுக் காரணமாயிருந்துவிட்டேன். நான் எங்கிருந்து மனந்திரும்ப வேண்டுமென்று தயவாகக் காண்பியும்" என்று ஜெபிப்போம்.

தூய ஆவியானவர் பாவ உணர்வை இருதயத்தில் கொண்டு வரும் போது நாங்கள் எங்களைத் தாழ்த்தி பொல்லாத வழிகளை அறிக்கையிட்டு, அதிக இரக்கத்திற்காகவும், மன்னிப்புக் காகவும் தேவனிடம் கெஞ்சுவோம். 'நாம் நம்முடைய வழிகளை சோதித்து ஆராய்ந்து கர்த்தரிடத்தில் திரும்புவோம்' புல.3:40. "ஆகையால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும், புலம்பலோடும், உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" யோவே 2:12.

ஜார்ஜ் முல்லரின் விசுவாச வாழ்வு - பகுதி-4

George Muller's Life of Trust - Part-4

(ஜார்ஜ் முல்லர் ஒரு பெரிய இல்லத்தைக் கட்டி இதுவரை நான்கு வாடகைக் கட்டிடங்களில் வாழ்ந்த பிள்ளைகளை அதில் கொண்டுவர உணர்த்தப்பட்டார். இந்தக் கட்டிடத்திற்காக முதல் நன்கொடையைப் பெற்றுக்கொள்ள ஒரு மாதமாக மனைவியோடு இணைந்து ஜெபித்தார். தொடர்ந்து பல மாதங்கள் ஜெபமும் விசுவாச சோதனையும் கடந்து சென்றன.)

150 குழந்தைகளைப் பராமரித்த முல்லரின் இருதயத்தில் 300 குழந்தைகளைப் பராமரிக்கும் அளவிலான கட்டிடத்தைக் கட்ட எண்ணத்தை தேவன் கொடுத்தார். ஆனால் தற்கால பொருளாதார நிலையோ விசுவாச சோதனையாக இருந்தது. பொருட்களின் விலையுயர்வு அதிகமாயிருந்தது. நன்கொடைகள் அதற்கேற்றபடி அதிகரிக்கவில்லை. அப்போது அவர் இவ்வாறு சிந்தித்தார்: "எனது பணிக்குத் தேவையான அனைத்தையும் தருவது எனது ஆண்டவருக்கு எளிதானது. புதிய இல்லம் நான் ஆரம்பிக்கும்போது தேவைகளையெல்லாம் அவர் எனக்குத் தருவார். நான் எதைக் கேட்டாலும் அவருக்குக் கொடுப்பதற்காகவே கேட்கிறேன். ஒவ்வொரு வருடமும் இப்போது எனக்குத் தேவைப்படுவதை விட இனி 2500 பவுண்ட் அதிகமாகத் தேவைப்படலாம்."

அவரது தேவைகளை தேவன் சந்தித்த விதங்களில் அவர் அதிக மகிழ்ச்சியடைந்தார். சிலர் தாங்கள் அனுப்புவதற்கு எண்ணிய பணத்தை அனுப்பாமல் பத்திரமாக வைத்திருந்ததாகவும், இப்போது அனுப்புவதற்குத் தூண்டப்பட்டதால் அனுப்புவதாகவும் கடிதம் எழுதினர். அந்தத் தொகை அவரது அப்போதைய தேவைக்குப் போதுமானதாயிருந்தது.

தன்னோடு பணிசெய்தவர்களோடு அவரது தலைமைத்துவ பொறுப்பில் சமநிலை ஏற்படுத்த வேண்டியதாயிருந்தது. எப்படியாயினும் அனைத்து தேவைகளையும் ஆண்டவர் சமூகத்தில் கொண்டு வந்து பதிலுக்காகக் காத்திருந்தார். "ஆண்டவரே தொடர்ந்து நான் தேவையிலிருந்து கொண்டிருக்கிறேன்" என்று அவர் ஜெபித்தார்.

"இந்தப் பணியில் என் வாழ்வு சோதனை நிறைந்ததாயிருந்தது. ஆனாலும் இது ஒரு மகிழ்ச்சியின் வாழ்வு. அளவற்ற சமாதானமும், பரலோக சந்தோஷமும் என் ஆத்துமாவில் அடிக்கடி பாய்ந்து சென்றது. ஏனெனில் உதவிக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் காத்திருந்தபோது புதிது புதிதான பதில்களைப் பெற்றேன். அதிக நேரம் காத்திருந்த போதும், தேவை அதிகமாயிருந்தாலும் இறுதியாக பதில் கிடைத்த போது ஏற்பட்ட சந்தோஷம் அதிகமாயிருந்தது. மேலும் பதில்கள் வித்தியாசமான விதங்களில் இருந்தபடியால் தேவனுடைய கரம் அதிகமாக வெளிப்பட்டதை உணர்ந்தேன். இத்தகைய வாழ்வில் நான் ஒருபோதும் சிறிதளவும் களைப்படையவில்லை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டிட பணிக்காக தேவைப்பட்ட தொகைக்காக முல்லர் ஏறெடுத்த ஜெபத்தை தேவன் கேட்டுவிட்டார் என்று அறிந்தபோது "தேவன் தொடர் ஜெபத்தைக் கேட்டு சந்தோஷப்படுகிறார் என்று அறிந்து கொண்டேன். லூக்.18:1-3 வசனங்களில் கூறப்பட்ட உவமையில் ஏழை விதவையின் தொடர் விண்ணப்பம் நீதி நியாயமற்ற நியாயாதிபதியின் நல்ல தீர்ப்புக்கு ஏதுவாயிருந்ததை நினைவு கூர்ந்தேன்" என்று கூறினார்.

மறுபடியும் மறுபடியும் முல்லர் புதிய அனாதை இல்லத்தின் தேவைகளுக்காக ஜெபித்தார். அவரது விசுவாசம் ஒருபோதும் அசையவில்லை. ஏற்ற வேளையில் தேவன் எல்லா வற்றையும் தேவைக்கேற்ப அளிப்பார் என்ற உறுதி அவரில் பலப்பட்டது. காலங்கள் கடந்து சென்றன. தேவன் பொருளாதாரத்தைத் தர அவர் காத்திருந்தார். அவரது உத்தமும், ஜெபமும் பெருகின. அயலகத்தாரின் நெருக்கமும், பிள்ளைகள் புதிய இல்லத்தில் வைக்கப்படுவதின் அவசியமும் அவரை ஜெபத்தோடு காத்திருக்கச் செய்தன. அனாதை இல்லத்தில் சேர்க்கப்படும் பிள்ளைகளின் பதிவு எண்ணிக்கையும் நீண்டு கொண்டே வந்தது.

கட்டிடத்தை கட்டுவதற்கான நிலத்தின் கிரயமும், கட்டுவதற்கான பொருளாதாரமும் கிடைக்கும்வரை கட்டுமானப் பணியை ஆரம்பிக்க வேண்டாம் என்பது முல்லரின் எண்ணம். கடைசியில் 607 நாட் களுக்குப் பின்னர் தேவையான பணம் கிடைத்தது. ஜெபத்தின் பயனாக அவர் 11000 பவுன்ட் பெற்றுக்கொண்டார்.

இல்லத்திற்கான கட்டிடம் முடிவு பெறும் தருவாயில் கூடுதலான பணம் வரத்தொடங்கியது. புதிதாக சேர்க்கப்படும் பிள்ளைகளுக்கு ஆடைகள், பிற பொருட்கள் போன்றவற்றை வாங்கவும் பணம் தேவையாயிருந்தது. ஏனெனில் 150 பிள்ளைகள் வாழ்ந்த நிலையில் இப்போது 300 பிள்ளைகள் இருந்தனர். எனவே புதிய கட்டிடத்திற்கு பிள்ளைகள் மாற்றப்பட்ட போது தேவைப்பட்ட கூடுதலான செலவுகளுக்குப் பணம் போதுமானதாயிருந்தது.

முல்லர் விரிவாக்கமடைந்த புதிய இல்லத்திற்குப் பிள்ளைகளைக் கொண்டு வந்தபோது தேசத்தில் காலரா என்ற கொடிய கொள்ளை நோய் பரவியது. இரு பெற்றோரையும் இழந்த 26 பிள்ளைகள் கூடுதலாக இங்கு சேர்க்கப்பட்டனர். அதனைத் தவிரவும் அனேக பிள்ளைகள் மேலும் சேர்க்கப்பட்டனர்.

அந்நாட்களில் ஏற்பட்ட விலையுயர்வால் ஊதியமின்றி உழைத்த பல மிஷனெறிகளுக்கும் அவர் உதவி செய்தார். அவர்கள் செய்த பயனுள்ள ஊழியத்தால் மகிழ்ச்சியடைந்தார்.

இரண்டாவது அனாதை இல்லம்

முன்னூறு பிள்ளைகளுக்கான இல்லத்தைத் திறந்த சில நாட்களில் 1000 பிள்ளைகளுக்கான இல்லத்தைக் கட்டும் எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. இதற்காக அவர் தேவ சித்தத்திற்காகக் காத்திருந்தார்.

அந்த நாட்களில் அவர் இப்படி எழுதியிருக்கிறார்: "இதில் நான் என் சொந்த சித்தத்தை நிறைவேற்ற விரும்பவில்லை. என் பரம தந்தையின் மகிமையையே நாடுகிறேன். என் மனம் மிகுந்த அமைதலுடனிருக்கிறது. என் இருதயம் மாம்சீக உற்சாகத்திலிருக்க வில்லை. நான் என் தேவனுடைய சித்தத்தை முழுமையாக அறிய வேண்டும். இந்தக் காரியத்தில் தேவனுடைய மகிமையே மேலானது. தேவ ஒத்தாசையால் அனுதினமும் ஜெபத்தோடு காத்திருந்து அவர் கட்டளையிடுமட்டும் பொறுமையாயிருப்பேன்."

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

இரண்டாவது இல்லத்தை ஆரம்பிப்பதற்கான காரணத்தை அவர் பட்டியலிட்டார். அப்போது 6000 அனாதைகள் சிறையிலிருந்தனர். அவர்களுக்குத் தங்குவதற்கு வேறு இடமில்லாதது தான் அதற்குக் காரணம். அவர்களைச் சிறையிலிருந்து வெளியே எடுக்கவும், அவர்கள் கவுரவமான ஒரு வாழ்க்கை வாழவும், அவர்கள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவும் அவர் விரும்பினார்.

எட்டு வாரங்களுக்குப் பிறகு ஜெபத்தின் பயனாக இருதயத்தில் சமாதானமும், சந்தோஷமும் பெற்று இல்லத்தை விரிவாக்க எண்ணம் கொண்டார். மனைவிக்கும் தெரிவிக்காமல் தொடர்ந்து ஜெபித்தார். அவர் தனியாக ஜெபித்த போது நிச்சயமின்மை மறைந்தது. அதற்கும் தேவையான 3500 பவுண்ட்களைத் தேவன் தரும்வரை அதை ஆரம்பிக்கமாட்டேனென்று காத்திருந்து ஜெபித்தார்.

ஒருமுறை 'நாளைக்காக ஏன் கவலைப்படவேண்டும்' என்ற எண்ணம் அவரில் உண்டானது. ஆனால் கிடைத்த தற்காலத்தை ஆண்டவருக்காக பயன் படுத்த வேண்டுமே! நாளை நமக்குரிய தல்லவே!

புதிய கட்டுமானத்தைக் குறித்து அறிவிக்கப்பட்ட போது நன்கொடைகள்வரத் தொடங்கின. அவை குறைவாகவே இருந்தாலும் அற்பமான ஆரம்பத்தை அசட்டை செய்யக் கூடாது என்று தெரிய மிழக்காமல் ஜெபித்தார். (தொடரும்)

உதாரகுணமுள்ள நமது பரலோக பிதா

Our generous heavenly father

Rich Carmicheal

நமக்கு உதாரண குணமுள்ள ஒரு பரலோக பிதா இருக்கிறார். அவரது உதாரகுணத்தை லூக்.15:11-32 வசனங்களில் இயேசு கூறிய உவமை மூலமாக அறியலாம். இளைய குமாரன் தூர தேசத்திலிருந்து திரும்பி வந்தபோது தான் தந்தையின் ஒரு ஒரு கூலிக்காரனாக வாழும் அந்தஸ்தையே எதிர்பார்த்து வந்தான். ஆனால் தந்தையுடைய உதார குணம் அவனை ஆச்சரியத்திற்குள் ஆக்கி விட்டது. அதனை 20-24 வசனங்களில் படியுங்கள்.

இந்த உவமையை சமீப நாட்களில் நான் படித்த போது இத்தந்தையின் தயாள குணம் மூத்த மகனிடமும் காண்பிக்கப்படுவதை கவனித்தேன். தன் தந்தை இளைய குமாரனுக்குக் காண்பித்த தயாள சிந்தையால் அவன் கோப மடைந்தான். அவனது கோப வார்த்தைகளுக்குப் பதிலளித்த தந்தை, "மகனே நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடைய தாயிருக்கிறது, உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்..... ஆனபடியால் நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்றார்". தந்தை மூத்த மகன் மீதும் கரிசனை உடையவராயிருந்த படியால், தனக்குரியவைகளெல்லாம் அவனுக்கும் உரியவை எனத் தெளிவு படுத்தினார்.

தந்தை இவ்வாறு இரு குமாரர்கள் மீதும் கரிசனையும், தயாளமும் உடையவராயிருந்தும் அவ்விரு குமாரரிடமும் தந்தையின் அன்பைப் புரிந்து கொள்ளும் இருதயம் இருக்கவில்லை. இளையவன் வெளிப்படையாகவே தந்தையின் பாசத்தை மதிக்காமல் அவருடைய ஆஸ்தியை மட்டும் வாஞ்சித்தான். "..... இளையவன் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு தூரதேசத்துக்குப் புறப்பட்டு போய் அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான்" வச.13. இறுதியாகப் புத்தி தெளிந்து மனந்திரும்புதலோடும், தாழ்மையோடும், தந்தையிடம் திரும்பி வந்தான். ஆனால் தந்தை இத்தனை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வாரென்றும் இத்தனை தயாளகுணம் அவனுக்குக் காண்பிக்கப்படும் என்றும் அவன் எண்ணிப் பார்க்கவேயில்லை.

மூத்த குமாரனோ, தந்தையோடு எப்போதும் தங்கியிருந்தும் அவரது தயாள இருதயத்தைத் தெளிவாக அறியக் கூடாமலிருந்தான். அப்படி அவன் அறிந்திருந்தால், அவரோடு சேர்ந்து சந்தோஷப்பட்டிருப்பான். கோபம் ஏற்பட்டிராது. தன் தந்தையின் அளவில்லாத ஆசீர்வாதங்கள், அன்பு, தயாளம், ஆஸ்தி ஆகியவற்றிற்கு உரிமை பெற்றிருப்பான். அவற்றை அனுபவிக்கும் சிலாக்கியம் பெற்றிருப்பான்.

இயேசு இந்த உவமையின் மூலம் உலகத் தந்தைகளின் சாயலையும் காண்பித்தார். அவர் ஜெபத்தைக் குறித்து போதித்தபோது கூறியது : "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்கு திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தை கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்கு பாம்பைக் கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையான வைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? மத்.7:7-11.

எனக்கு மிகுந்த தயாளகுணமுள்ள ஒரு தந்தை இருப்பதால் நான் மிகுந்த நன்றியுடனிருக்கிறேன். உவமையில் காண்பது போல எனது தந்தை அவருக்குச் சொந்தமான யாவற்றையும் எனக்களிப்பார். ஏற்கெனவே அவர் என்னை தமது ஈவுகளால் அதிகமதிகமாக ஆசீர்வதித்திருக்கிறார். நீங்களும் இப்படிப்பட்ட அனுபவத்தை உடையவர்களாயிருப்பீர்கள் என நம்புகிறேன். எனது பரமபிதாவின் தயாள குணத்திற்கு முன்பாக இவ்வுலக பிதாக்களின் தயாள சிந்தை மிக மிக அற்பமானது.

எனவே நமது பிதா உருக்கமும் தயாளமும் நிறைந்தவராயிருப்பதால் நாம் மிகுந்த விசுவாசத்தோடு அவரிடம் கேட்டு, தேடி, தட்டிப் பெற்றுக் கொள்வது நமது கடமை. எவ்வளவு அதிகமாக அவரை அறிந்து அவரைக் கனம் பண்ணுகிறோமோ அவ்வளவு அதிகமாக அவருடையவைகளையெல்லாம் நமக்குரியவைகளாகக் கண்டுகொள்வோம்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" எபேசி.1:3.

சீர்தனைக்கு
எவ்வளவு அதிகமாக அவரை அறிந்து அவரைக் கனம் பண்ணுகிறோமோ அவ்வளவு அதிகமாக அவருடையவைகளையெல்லாம் நமக்குரியவைகளாகக் கண்டுகொள்வோம்.

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 95432 21008

Book Packets contains periodicals

To

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason